<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 76/2024

அரசுதரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஜெயக்குமார் | வயது | : | 53 |
| தந்தை/கணவர் பெயர் | : | சதாசிவம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி 18.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது விருத்தாசலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2018 அன்று சோழதரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் ஆசைத்தம்பி அவருக்கு உதவியாக நானும் ,தலைமை காவலர் 2104 செல்வராஜ் ஆகியோர்கள் வீராணம் ஏரி மணல் திருட்டு சம்பந்தமாக சோழதரம், அரந்தாங்கி, மணவெளி, வீராணம் ஏரிக்கரை ஆகிய இடங்களில் மணல் திருட்டு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது மணவெளி வீராணம் ஏரிக்கு அருகில் வந்த TN 91 A 2017 என்ற டிராக்டரை ஓட்டி வந்தவரை தடுத்து நிறுத்தி சோதனை செய்த போது மேற்படி டிராக்டரை நிறுத்திவிட்டு எதிரி தப்பி ஓடிவிட்டார். அவர் ஓட்டி வந்த டிராக்டரை சோதனை செய்த போது சுமார் 1 யூனிட் வீராணம் ஏரி மணல் இருந்தது.

டிராக்டரை ஓட்டிவந்தவர் பற்றி விசாரிக்க மணவெளி, ஆரோக்கியதாஸ் வயது 41 என தெரியவந்தது. மணலை ஏற்றி வந்ததற்கு எவ்வித அனுமதியும், சான்றிதழும் இல்லாமல், உரிமம்இல்லாமலும் கனிம வளத்தினை சேதப்படுத்தும் வகையில் மணலை திருடியதற்காக அந்த இடத்தில்அன்னிய சாட்சிகள் யாரும் இல்லாததால் 3.10 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து உதவி ஆய்வாளர் கைப்பற்றியதில் நானும் செல்வராஜ் தலைமை காவலரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் தடயம் சகிதம் 8.30 மணிக்கு நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் 148/2018, பிரிவுகள் 379, 430 IPC r/w 21(1) Mines and Mineral Act படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். தற்போது உரிமையாளர் திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்ற வண்டி தன் வீட்டில் உள்ளதை வீடியோவில் காண்பித்தார். அது **சா.பொ.1.** தற்போது புகைப்படத்தில் என்னிடம் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்டது. அதன் புகைப்படம் **சா.பொ.2** விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

சம்பவ இடத்திற்கு நானும் உதவி ஆய்வாளர் ஆசைத்தம்பி, செல்வராஜ் தலைமை காவலர் ஆகியோர்கள் சென்றோம் .காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு செல்ல இரண்டு வழியாக செல்லாம், அரந்தாங்கி வழியாகவும், மணவெளி வழியாகவும் செல்லலாம்.

நாங்கள் மூவரும் இருசக்கர வாகனத்தில் தான் சென்றோம். உதவி ஆய்வாளர் ஒரு வாகனத்திலும் நாங்கள் இருவரும் ஒரு வாகனத்திலும் சென்றோம். நாங்கள் காவல் நிலையத்திலிருந்து அரந்தாங்கி சென்று பிறகு மணவெளி சென்றோம். ஏரி மணல் தான் வண்டியில் இருந்தது. எரி மணல் கருப்பு நிறத்தில் இருக்குமா என்றால் ஆற்று மணல் போல தான் இருக்கும். செம்மண்ணுக்கு அங்கு வேலை கிடையாது. ஆற்று மணல் நிறம் வண்டல் கலந்த நிறமா என்றால் ஆற்று மணல் நிறம். ஆற்று மணல் என்றால் மஞ்சள் நிறமா என்றால் பாசி நிறம். கைப்பற்றப்பட்டதாக வண்டியின் Engine Number Chasis Number குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மணல் ஏற்றி வந்த வாகனம் டிப்பரா, டிராக்டரா, மாட்டு வண்டியா என்று குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தினை அதிகாலை 3.10 மணிக்கு உதவி ஆய்வாளர் ஆசைத்தம்பி அவர்கள் கைப்பற்றினார். காலை 8.30 மணிக்கு வண்டியை காவல் நிலையம் கொண்டு சென்றோம். ஓட்டுநர் இல்லாததால் நேரம் ஆகிவிட்டது. வாகனத்தினை யார் சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு ஓட்டிவந்தது என்று தெரியவில்லை. வண்டியில் சாவி இருந்ததா என்றால் இருந்தது போல் இல்லை. பிறகு எப்படி ஓட்டி சென்றோம் என்றால் ஓட்ட தெரிந்த மெக்கானிக் மூலம் திறந்து எடுத்து சென்றோம். என்னுடைய விசாரணையில் வாகனத்தினை எந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ஏரிக்கரையில் தான்.

அந்த இடத்தில் நிலங்கள் உள்ளது என்றால் அந்த இடத்தில் நிலம் இல்லை, ஏரியிலிருந்து கரைக்கு வந்த இடத்தில் தான் வண்டி இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதும், விவசாய வேலைக்கு சென்ற போது பஞ்சர் ஆகி நின்றிருந்த வண்டியினை நாங்கள் வலுக்கட்டாயமாக எடுத்துவந்தோம் என்பதும் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 76/2024

அரசுதரப்பு 2வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வராஜ் | வயது | : | 59 |
| தந்தை/கணவர் பெயர் | : | சாமியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது காட்டுமன்னார் கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2018 அன்று சோழதரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் ஆசைத்தம்பி அவருக்கு உதவியாக நானும் ,தலைமை காவலர் 2104 செல்வராஜ் ஆகியோர்கள் வீராணம் ஏரி மணல் திருட்டு சம்பந்தமாக சோழதரம், அரந்தாங்கி, மணவெளி, வீராணம் ஏரிக்கரை ஆகிய இடங்களில் மணல் திருட்டு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது மணவெளி வீராணம் ஏரிக்கு அருகில் வந்த TN 91 A 2017 என்ற டிராக்டரை ஓட்டி வந்தவரை தடுத்து நிறுத்தி சோதனை செய்த போது மேற்படி டிராக்டரை நிறுத்திவிட்டு எதிரி தப்பி ஓடிவிட்டார். அவர் ஓட்டி வந்த டிராக்டரை சோதனை செய்த போது சுமார் 1 யூனிட் வீராணம் ஏரி மணல் இருந்தது. டிராக்டரை ஓட்டிவந்தவர் பற்றி விசாரிக்க மணவெளி, ஆரோக்கியதாஸ் வயது 41 என தெரியவந்தது.

மணலை ஏற்றி வந்ததற்கு எவ்வித அனுமதியும், சான்றிதழும் இல்லாமல், உரிமம்இல்லாமலும் கனிம வளத்தினை சேதப்படுத்தும் வகையில் மணலை திருடியதற்காக அந்த இடத்தில்அன்னிய சாட்சிகள் யாரும் இல்லாததால் 3.10 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து உதவி ஆய்வாளர் கைப்பற்றியதில் நானும் செல்வராஜ் தலைமை காவலரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் தடயம் சகிதம் 8.30 மணிக்கு நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் 148/2018, பிரிவுகள் 379, 430 IPC r/w 21(1) Mines and Mineral Act படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். தற்போது உரிமையாளர் திரும்ப இடைக்காலப்பொருப்பில் பெற்று சென்ற வண்டி தன் வீட்டில் உள்ளதை வீடியோவில் காண்பித்தார். அது **சா.பொ.1.** தற்போது புகைப்படத்தில் என்னிடம் காட்டப்படும் வண்டி தான் கைப்பற்றப்பட்டது. அதன் புகைப்படம் **சா.பொ.2** விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் வாகனத்தினை உதவி ஆய்வாளர் ஆசைத்தம்பி கைப்பற்றினார். வாகனம் எந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது என்று எனது விசாரணையில்குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ஏரிக்கரையில் தான் வண்டி வந்து கொண்டிருந்தது. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்பதும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்பதும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல.